**தமிழ் வருடாந்திர மாநாடு**
**மெதடிஸ்ட் பெண்கள் தலைவியின் அறிக்கை**
**42 வது அமர்வு 26 - 28 ஆகஸ்ட் 2017 எம்பரர் ஹோட்டல், மலாக்கா.**

கருப்பொருள்: "ஆண்டவருடைய மகிமையைத் தேடுவது"
குறிக்கோள்: "இயேசுவை அறிந்து அவரை பறைசாற்றுதல்"
செயற்குழு உறுப்பினர்கள் 2017 - 2018

| | | |
|---|---|---|
| தலைவி | திருமதி. கனி ஜெயபால் | டி.எம்.சி சுபாங் ஜெயா |
| உபதலைவி | திருமதி. சாந்தி சேகர் | டி.எம்.சி செந்துல் |
| காரியதரிசி | திருமதி. சைனி விஜயதாஸ் | டி.எம்.சி சுங்கை பீலேக் |
| பொருளாளர் | திருமதி. மார்கிரேட் செல்லையா | டி.எம்.சி கிள்ளான் |

ஒருங்கிணைப்பாளர்கள்:

| | | |
|---|---|---|
| ஆவிக்குரிய ஜீவியம் | திருமதி. மார்கிரேட் நெல்சன் | டி.எம்.சி சுபாங் ஜெயா |
| கிறிஸ்துவ கல்வி | திருமதி. ஜென்சி ஷாம் | டி.எம்.சி பினாங்கு |
| சமூக சேவை | திருமதி. லீலா செல்லையா | டி.எம்.சி. கோலாலம்பூர் |

| | | |
|---|---|---|
| ஆலோசகர்கள்: | மறைதிரு. டேனிஸ் ராஜ் | த.வ.மா தலைவர் |
| | திருமதி. மேரி தேவதாசன் | டி.எம்.சி. தமிழ் |
| | திருமதி. சகுந்தலா டேவிட் | செட்டில்மென்ட் |
| | டத்தோ எலிஸ் ஜாவான் | டி.எம்.சி ஈப்போ |
| | | பொதுமாநாட்டுத் தலைவி |
| நியமனக்குழுத் தலைவி: | திருமதி.விஜயதாரா ஜெயராஜ் | |
| | | கேட்வே, கிளானா ஜெயா |
| CCM Rep: | திருமதி.சாந்தி சேகர் (மாற்று : ருமதி.ரேச்சல் தேவதாசன்) | |
| NCWO Reps: | திருமதி. சகுந்தலா டேவிட் (மாற்று: திருமதி மார்கிரேட் நெல்சன்) | |
| JCWW Reps: | திருமதி. கனி ஜெயபால், திருமதி. சாந்தி சேகர், திருமதி. மார்கிரேட் செல்லையா (மாற்று: திருமதி. மேரி தேவதாசன், திருமதி. சகுந்தலா டேவிட்) | |

மெதடிஸ்ட் பெண்கள் தலைவியாக பொறுப்பேற்று என்னுடைய முதலாவது வருடம் இது. இது ஒரு சவால் நிறைந்த பணியாக இருந்தாலும், பெண்களாக நாம் ஒன்று கூடி ஆண்டவருக்காக பெரிய காரியங்களை செய்வது மனதுக்கு மிகவும் உற்சாகமளிக்கக் கூடியதாக இருக்கிறது. நாம் செய்கிற எல்லா காரியங்களிலும், ஆண்டவருடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் ஆறுதலையும் வெளிக்காட்டுவதே நமது நோக்கமாயிருக்க வேண்டும்.

1. நமது சமூதாயம்:

அ. நமது மாநாட்டில் மொத்தம் 6 மாகாணங்கள் உள்ளன. ஆண்டவருடைய பெரிதான கிருபையால் இந்த வருடம் நமது மாநாட்டில் மேலும் 2 புதிய பெண்கள் சங்கங்களை ஆண்டவர் நமக்கு ஆசீர்வதித்துக் கொடுத்து இருக்கிறார். அவையாவன: கேட்வே மெதடிஸ்ட் பெண்கள் ஐக்கியம், பாலோ பெண்கள் ஐக்கியம். இவை முறையே மார்ச் 5ம் தேதியும், ஜூன் 11ஆம் தேதியும் உதயமானது. இத்துடன் சேர்த்து நமது மாநாட்டில் மொத்தம் 54 பெண்கள் ஐக்கிய சங்கங்கள் உள்ளன.
இந்த 6 மாகாணங்களிலும் உள்ள தலைவிகள் மிகச் சிறந்த முறையில் தங்களது குழுவினருடன் இணைந்து மிகவும் உற்சாகமாய் செயல்பட்டு வருகின்றனர். தங்கள் மாகாணத்திலுள்ள சபைகளை சந்திப்பது, பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என்று மிகவும் சிறப்பாக செயல்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரையும் நான் என் மனதார வாழ்த்துகிறேன். அவர்கள் சந்திக்கும் சபைகள் வெகு தூரத்தில் அமைந்திருந்தாலும் மிகவும் சிரத்தை எடுத்து போய் சந்திக்கின்றனர்.

ஆ. நான் பல சபைகளைப் போய் சந்திக்கவும், தெற்கு மற்றும் மத்திய மாகாண ஆண்டு பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளவும் அங்குள்ள பெண்களை சந்திப்பதற்கும் நல்ல வாய்ப்புகள் கிடைத்தது. நான் சிபுவில் நடைபெற்ற பொது மாநாட்டுப் பெண்கள் நிர்வாகக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டி இருந்ததால் எனது சார்பில் திருமதி.மார்கிரேட் நெல்சன் பேராக் மாகாணக் கூட்டத்தில் கலந்து கொண்டார். நான் மற்றொரு கூட்டத்தில் கலந்து கொள்ள

வேண்டி இருந்ததால் எனது சார்பில் திருமதி சாந்தி சேகர் கிழக்கு மாகாணப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். மேலும் எனது மகனின் திருமண ஏற்பாடுகள் நிமித்தம் பல ஆயத்தங்கள் செய்ய வேண்டி இருந்ததால் எனது சார்பில் திருமதி ஜென்சி தென் மாகாண பெண்கள் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இ. நான் பேராக்கில் நடைபெற்ற ஆவிக்குரிய ஜீவிய முகாமில் கலந்து கொண்டு அங்குள்ள பெண்களை சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் டி.எம்.சி பாலோ, கேட்வே, செர்டாங் மற்றும் மலாக்காவிலுள்ள பெண்களை சந்திப்பதற்கும் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

ஈ. சில பெண்கள் ஐக்கியங்கள் மாதத்திற்கு 2 முறையும் ஒரு சிலர் மாதத்திற்கு ஒரு முறையும் கூடுகின்றனர். ஒரு சில இடங்களில் பெண்கள் ஐக்கியங்கள் அடிக்கடி கூடுவதில்லை. அப்படி அவர்கள் ஒன்று கூடுவதில் ஏதாவது பிரச்சனைகள் இருக்குமானால், உதவி வேண்டுமானால் உங்கள் மாகாணத்தலைவிகளையோ அல்லது எங்களில் யாரையாவது நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

| எண் | மாகாணம் | மெ.பெ. ஐக்கியம் | அங்கத்துவம் | | தலைவி |
|---|---|---|---|---|---|
| | | | 2016 | 2017 | |
| 1 | வடக்கு | 6 | 152 | 148 | திருமதி.முனீஸ்வரி அருள்மணி |
| 2 | பேராக் | 11 | 403 | 422 | திருமதி.ஜெபகனி டேவிட் |
| 3 | மத்திய | 9 | 259 | 259 | திருமதி.சாரா ஆபிரகாம் |
| 4 | சிலாங்கூர் | 11 + 1 | 299 | 327 | திருமதி. வின்சலா ஜேசுதாஸ் |
| 5 | கிழக்கு | 6 | 102 | 102 | திருமதி. விக்டோரியா |
| 6 | தெற்கு | 9 + 1 | 247 | 244 | பிரதாப்திருமதி. எஸ்தர் அமிர்தம் |
| | மொத்தம் | 54 | 1462 | 1502 | |

2. த.வ.மா மெத்தடிஸ்ட் பெண்கள் ஐக்கிய நிகழ்ச்சிகள்:

நமது மாநாட்டின் முக்கிய நோக்கமே நமது சபைகளில் இருக்கும் பெண்கள் மத்தியில் சிறப்பாக ஊழியம் செய்ய வேண்டும் என்பதே. இந்த நோக்கத்தில் அநேக உபகரணங்களை (materials) நமது ஸ்தல சபைகளுக்கு அனுப்பியுள்ளோம். பெண்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் மட்டுமல்ல ஆண்டவரை இன்னும் ஆழமாக அறிந்து கொள்ளவும் சமூக மேம்பாட்டில் ஓங்கி வளரவும் அவர்களை ஊக்குவிக்கிறோம்.

அ. ஆவிக்குரிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. மார்கிரேட் நெல்சன்:-

i. மெதடிஸ்ட் பெண்கள் ஜெபநாள் ஜனவரி மாதத்தில் அனுசரிக்கப்பட்டது. இந்த ஆண்டை நாம் ஜெபத்தோடும், உபவாசத்தோடும் தொடங்கினோம்.

ii. அகில உலக ஜெப நாள் 4.3.2017ல் அனுசரிக்கப்பட்டது. இந்த வருடத்தின் ஆராதனை ஒழுங்கும் தியானமும் பிலிப்பைன்ஸ் பெண்களால் ஆயத்தம் பண்ணப்பட்டது. இதற்குரிய பாடங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு எல்லா சபைகளுக்கும் கொடுக்கப்பட்டது. இந்த ஆராதனை மூலமாக எடுக்கப்பட்ட காணிக்கை பிலிப்பைன்ஸ் நாட்டின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக சி.சி.எம் மூலமாக பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அனுப்பட்டது.

iii. அகில உலக மெதடிஸ்ட் பெண்கள் தின ஆராதனையின் தியானம் அகில உலக மாநாட்டின் நிர்வாக குழுவிலிருந்து "நம் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள்"என்ற தலைப்பில் தியானம் இருந்தது. இந்த ஆராதனை ஜனவரி மாதம் நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட காணிக்கைகள் உலக கூட்டமைப்பிற்கு பொது மாநாட்டு பெண்கள் சங்கங்கள் மூலம் அனுப்பப்பட்டது.

iv. ஜெப, சுய வெறுப்பு வாரம்: ஆகஸ்ட் மாதத்தின் கடைசி வாரத்தில் சுய வெறுப்பு வாரம் அனுசரிக்கப்பட்டது. இந்த தியானங்கள் பொது மாநாட்டிலிருந்து நமக்கு அனுப்பப்படும். ஆவிக்குரிய ஒருங்கிணைப்பாளர் பாடங்களை தமிழில் மொழிபெயர்த்து எல்லா சபைகளுக்கும் அனுப்பினார். இதில் எடுக்கப்பட்ட காணிக்கைகள் பொது மாநாட்டு பெண்கள் ஐக்கியத்திற்கு அனுப்பப்பட்டது.

v. ஆவிக்குரிய ஜீவிய முகாம் எல்லா மாகாணங்களிலும், த.வ.மா. மெதடிஸ்ட் பெண்கள் மாநாட்டிற்கு கொடுத்த மானியத்தின் மூலம் நடைபெற்றது.

ஆ. கிறிஸ்துவ கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி.ஜென்சி ஷாம்:-

i. 2017ல் வேதவினா போட்டிக்கென்று யாத்திராகமம் 1 - 20 வரைக்கும் கேள்விகள் எடுக்கப்பட்டுள்ளது. இது ஸ்தல சபைகளிலும், மாகாணங்களிலும் நடைபெற்றது. மாநாட்டிலும் இந்த போட்டிகள் நடைபெற உள்ளது.

ii. மேலும் இந்த புத்தகத்தைப் பற்றி இன்னும் தெளிவாக தெரிந்து கொள்ளும் வகையில் யாத்திராகம புத்தகத்தின் சுருக்கம் தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது.

iii. கிறிஸ்துவ ஒருங்கிணைபாளர் கிறிஸ்துவ இல்லற குடும்ப வாரத்திற்கான தியானங்களை ஆயத்தம் செய்து கொடுத்தார். இந்த வருடத்துக்கான கருப்பொருள் “குடும்பங்கள் தேவனுடைய மகிமையைத் தேடுவது”. இந்த ஆராதனையில் எடுக்கப்பட்ட காணிக்கைகள் ஸ்தல சபைகளே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. குடும்பத்திலுள்ள அனைவரும் பங்கெடுக்கும் வகையில் உற்சாகப்படுத்தப்பட்டனர். ஒரு குடும்பத்திலுள்ள அப்பா, பிள்ளைகள் மற்றும் அனைவருக்கும் ஏற்ற வகையில் பாடங்களும் அமைக்கப்பட்டது.

iv. நமது சபைகளில் இருக்கும் சிறந்த பெண் பேச்சார்கள் பட்டியல் ஒன்று இந்த வருடம் தயாரிக்கப்பட்டு எல்லா சபைகளுக்கும் அனுப்பப்பட்டது. அவர்களை ஸ்தல சபைகளில் பயன்படுத்தினோம். அது அவர்கள் இன்னும் ஆண்டவருக்குள் வளருவதற்கு ஒரு சிறந்த பயிற்சியாக அமைந்தது.

<u>இ.</u> சமூக சேவை ஒருங்கிணைப்பாளர் திருமதி லீலா செல்லையா:-

i. 21.05.17 அன்று அனுசரிக்கப்பட்ட மெதடிஸ்ட் பெண்கள் ஞாயிறு ஆராதனை ஒழுங்கை இவர்கள் ஆயத்தம் செய்து எல்லா சபைகளுக்கும் அனுப்பினார்கள். இந்த வருடத்தின் கருப்பொருள் “தேவனுடைய மகிமையைத் தேடுவது”. மெதடிஸ்ட் பெண்கள் ஞாயிறுக்கு முந்தைய வாரம் முழுவதும் வீடு சந்திப்புகள், ஜெபக்கூடுகைகள், மற்றும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் செய்யும்படி நான் உங்களை உற்சாகப்படுத்தியிருந்தேன். இப்படிப்பட்ட நிகழ்வுகளோடு மெதடிஸ்ட் பெண்கள் ஞாயிறு முடிவடையும்படி வலியுறுத்தியிருந்தேன். எல்லா சபைகளிலும் பெண்கள் தலைமையில் ஆராதனைகள், பிரசங்கங்கள் போன்ற காரியங்கள் நடந்தன. ஒவ்வொரு ஸ்தல சபைகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் புகைப்படங்களைக் கண்டு மிகவும் சந்தோஷமும், மனநிறைவும் அடைந்தோம்.

நமது த.வ.மா ன் முடிவின்படி இந்த வருடம் நாம் சேகரித்த காணிக்கைகளை நமது ஸ்தல சபைகளே வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நமது பெண்கள் செய்யும் பல்வேறு வகையான ஊழியங்களுக்கும் பெண்களின் மேம்பட்டுக்கான அம்சங்களுக்கும் இதை பயன்படுத்திக் கொள்ளலாம். மெதடிஸ்ட் பெண்கள் காணிக்கைகளுக்குப் பதிலாக நமது த.வ மா நமக்கு ரிங்கிட் மலேசியா 30,000/- கொடுத்துள்ளது. அதற்காக நமது மாநாட்டிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ii. ரிங்கிட் மலேசியா 1200/- தேவையுள்ள மாணவிகளுக்கு கல்விக் கடனுதவியாக கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன் பெற்றவர்கள் தங்கள் படிப்பு முடிந்த பிறகு வேலை செய்யும் போது சிறுக சிறுக இந்தக் கடனைக் கொடுத்துவிட்டால் இன்னும் அநேகப் பெண்களின் படிப்பிற்கு நாம் உதவி செய்யலாம்.

மேற்சொன்ன 3 ஒருங்கிணைப்பாளர்களும் த.வ.மாநாட்டின் வழிநடத்துதலின் படி சுவிஷேசம், கிறிஸ்தவ கல்வி, சமூக சேவை போன்ற பல்வேறு ஊழிய குழுக்களில் பங்கேற்றுள்ளனர்.

<u>3. நமது ஊழியங்கள்:</u>

i. <u>ஷெக்கினா இல்லம் போர்ட் கிள்ளான்</u>: ஷெக்கினா இல்லம் திருமதி. விஜயதாரா தலைமைத்துவத்தில் நன்றாக நடந்து வருகிறது. இதில் 20 பெண்கள் தங்கலாம். ஆனால் தற்போது 16 பெண்கள் தங்கியிருக்கிறார்கள். அந்த இல்லம் நல்ல சுத்தமாக எல்லா வசதிகளோடும் காணப்படுகிறது. திருமதி லீலா ரமணி அங்கு சிறப்பாக பணியாற்றி வருகிறார்.

ii. <u>சுவிஷேச மற்றும் அருட்பணி ஊழியங்கள்:</u> நமது பெண்களை சுவிஷேச மற்றும் அருட்பணி ஊழியங்களில் ஈடுபட செய்யும் வகையில் சராவாக்கிற்கு 3 பயணங்களை ஏற்பாடு செய்திருந்தோம். அதில் 2 ஊழியங்கள் கூச்சிங்கில் உள்ள இந்தியர்கள் மத்தியிலும் 1 பயணம் செப்பிலுக்கில் உள்ள அந்த பிரதேச மக்கள் மத்தியிலும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கான விமான டிக்கெட், உணவு மற்றும் தங்கும் இடத்திற்கு உண்டான செலவில் பாதி செலவை மானியமாக நமது மெதடிஸ்ட் பெண்கள் மாநாடு பொறுப்பு ஏற்றுள்ளது. இனி வரும் நாட்களில் நமது பெண்கள் அருட்பணி ஊழியங்களில்

உற்சாகமாக ஈடுபடுவார்கள் என்று நம்புகிறேன். இதன் ஒருங்கிணைப்பாளராக திருமதி சாந்தி இருக்கிறார்கள்.

iii. கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள்:(த.வ.மா): இந்த வருடமும் எப்பொழுதும் போல நமது சபைகளோடு இணைந்து வெளிப்புற ஊழியங்கள் நடக்கும் இடங்களில் கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் நடத்த உள்ளோம்.

iv. மெதடிஸ்ட் பெண்கள் மையம் (MWC) உலு கிள்ளான் (GCMW): உலு கிள்ளானில் இருக்கிற நமது கட்டடத்திற்கு நாம் தீர்மானம் செய்திருந்த RM 300,000 தொகையில் "ஒரு செங்கல் வாங்குங்கள்" திட்டத்தின் மூலம் RM.130,000 சேகரித்து நாம் அனுப்பியுள்ளோம். இந்த பெரிய திட்டத்திற்கு பங்களிப்புக் கொடுத்த ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களுக்கும், சபைகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தொடர்ந்து இந்த திட்டத்திற்கு உங்கள் ஆதரவை தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். வரும்நாட்களில் இங்கு தங்கும் விடுதிகள், கருத்தரங்க மையங்கள், பாலர் பள்ளி, மற்றும் கிளினிக்குகள் போன்றவைகள் கட்டுவதற்கு போதுமான இடங்கள் இருப்பதால் நாம் இதை பயன்படுத்திக்கொள்ளலாம்.மேலும் நமது உலு கிள்ளான் சபை இந்த வளாகத்துக்குள் அமைந்திருப்பதாலும் நமக்கு இதன் மீது இன்னும் அதிகமான ஈடுபாடு காணப்படுகிறது.

4. பொது மாநாட்டு மெதடிஸ்ட் பெண்கள் (General Conference Methodist Women):

i. E-Berita (http://WWW.gcmw.org.my) பொது மாநாட்டு மெதடிஸ்ட் பெண்களின் அதிகாரபூர்வக் குரல்.

ii. பொம்மை சமூகத்திட்டம்: (The Toy community project) இத்திட்டத்தின் நோக்கம் கல்வி சார்ந்த பொம்மைகளை குழந்தைகளின் மன/உடல் வளர்ச்சிக்காக கொடுப்பது. ஒவ்வொரு மாகாண பெண்கள் ஐக்கியமும், ஸ்தல பெண்கள் ஐக்கியமும் தாங்கள் வசிக்கும் இடங்களில் அருகில் இருக்கும் அனாதை இல்லங்களுக்கு சென்று மறுசுழற்சி செய்த அல்லது உபயோகித்த பொம்மைகள் இருக்குமானால் அதை அவர்களுக்கு வழங்கலாம்.

5. மற்ற காரியங்கள்:

1. பழஞ்சுவடி காப்பகங்கள்: நமது த.வ.மா மெதடிஸ்ட் பெண்கள், நம்முடைய கடந்த கால பெண்கள் ஐக்கியத்தின் புகைப்படங்கள், பத்திரிக்கைகள், போன்றவைகளை சேகரித்து ஒரு தொகுப்பாக வெளியிட முடிவெடுத்துள்ளோம். திருமதி விஜயதாரா மற்றும் திருமதி மேரி தேவதாசன் அவர்களும் இதை பொறுப்பேற்று செய்யவுள்ளனர். நமது நீண்ட கால விருப்பமும், நோக்கமுமே நமது மாநாட்டின் மெதடிஸ்ட் பெண்கள் நிகழ்வுகளை ஒரு தொகுப்பாக வெளியிட வேண்டும் என்பதே. ஒவ்வொரு மாகாண மெதடிஸ்ட் பெண்கள் ஐக்கியமும், ஸ்தல பெண்கள் ஐக்கியமும் தங்களது பழைய (கடந்த கால) அமர்வின் நடவடிக்கைக் குறிப்புகள், ஆண்டுப் பொது கூட்ட அறிக்கைகள், புகைப்படங்கள் போன்றவற்றை ஒரு தொகுப்பாக சேர்த்து வைக்கும்படிக்கு உங்களை அன்புடன் வலியுறுத்துகிறேன்.
2. கடந்த பிப்ரவரி மாதம் 6 -10 ம் தேதி 2017ல் The Asian Young Women Leadership Development (AYWLD) வியட்னாமில் உள்ள "ஹோ செ மின்" சிட்டியில் நடைபெற்றது. நமது த.வ.மாநாட்டை பிரதிநிதித்து குமாரி. அகாதா எல்பிஸ், சுபாங் ஜெயா தமிழ் மெதடிஸ்ட் சபையிலிருந்து கலந்து கொண்டார். இந்த நிகழ்வை "ஸ்க்ராண்டன்" பெண்கள் தலைமைத்துவ மையம், கொரியாவும் (Scranton Women's Leadership Centre, Korea), வெஸ்லி பவுண்டேஷன், ஜப்பான், (Wesley Foundation , Japan,) இணைந்து நடத்தினார்கள். இந்த நிகழ்வின் கருப்பொருள் "சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருங்கள்" என்பதே.
3. த.வ.மா மெதடிஸ்ட் பெண்கள் இணையதளம்: திருமதி வின்சலா அவர்கள் தலைமைத்துவத்தின் கீழ் இயங்குகிறது. இதில் தங்களது ஸ்தல சபைகள், மாகாண சபைகளில் கடந்த ஆண்டுகளில் நடந்த சுயவெறுப்பு வாரம், கிறிஸ்துவ குடும்ப இல்லற வாரம் போன்றவற்றின் பாடங்கள், செய்திகள் போன்றவற்றை உங்களுடைய பிரயோஜனத்திற்காக பதிவேற்றம் செய்யவுள்ளோம்.(http://www.tacmethodist.org/tac/)
4. த.வ.மா மெதடிஸ்ட் பெண்கள் முகநூல்: TAC MW Facebook (https://www.facebook.com/groups: இந்த முகநூலில் உங்களுடைய ஸ்தல மற்றும் மாநாட்டு நிகழ்வுகள், செய்திகள், புகைப்படங்கள் போன்றவற்றை பகிர்ந்து கொள்ளலாம். இதை திருமதி.முனீஸ்வரி அவர்கள் மேலாண்மை செய்து வருகிறார். இவர்கள் நமது மாநாட்டு அமர்வின் விளம்பர வீடியோவையும் தயாரித்து வெளியிட்டு உள்ளார்.
5. ஜெபக்குழு: திருமதி. சைனி விஜயதாஸ் அவர்கள் ஜெபக்குழுவுக்கு ஒருங்கிணைப்பாளராக உள்ளார். இவர்கள் தவறாமல் குழுவாக நமது டி.ஏ.சி. விஸ்மாவில் கூடி ஜெபிக்கிறார்கள்.

6. <u>பராமரிப்பு:</u> இதன் ஒருங்கிணைப்பாளராக திருமதி.விஜயதாரா இருக்கிறார்கள். நமது டி.ஏ.சி போதகர்களின் நலன், மற்றும் அவர்களது பராமரிப்பு காரியங்களை பார்த்துக் கொள்ளுகிறார்கள்.

<u>6. பங்காளித்துவங்கள்:</u>

1. சி.சி.எம். பெண்கள் பணி ஒருங்கிணைப்பாளராக திருமதி. சாந்தி சேகர் உள்ளார்கள்.
2. NCWO (National Council of Woman's Organisation) ஒருங்கிணைப்பாளராக திருமதி. மார்கிரேட் நெல்சன் இருக்கிறார்.
3. பிரிக்பீல்ஸ், பாம் கோர்ட்டில் உள்ள நமது பெண்கள் விடுதி திருமதி சாந்தி சேகர் தலைமைத்துவத்தில் இயங்கி வருகிறது.
4. தனித்து வாழும் தாய்மார்கள் இல்லம், சுங்கைப் பட்டாணி: நமது மெதடிஸ்ட் பெண்கள் திருமதி.சகுந்தலா டேவிட், திருமதி.ஜென்சி ஷாம் மற்றும் திருமதி.முனீஸ்வரி கிருஷ்ணன் ஆகியோர் குழுவாக இதனை நிர்வகித்து வருகின்றனர். இவ்வில்லத்தின் வருட வாடகை ரிங்கிட் மலேசியா 7,200/-
5. Ray of Hope: நமது சிலாங்கூர் மாகாண சமூக சேவை தலைவி திருமதி. ஜேசுமணி தமிழரசன் அவர்கள் இந்த குழுவில் இருக்கிறார்.
6. வெளிப்புற ஊழியங்களுக்கு கிறிஸ்மஸ் நிகழ்வுகள் நடத்த பண உதவிகள் செய்து வருகிறோம்.
7. இறையியல் கல்லூரி மாணவர்கள் பயிற்சிக்கு ரிங்கிட் மலேசியா 5,000 அளிக்கிறோம்.

<u>7. வருங்காலத் திட்டங்களும், அதற்கான ஆய்வுகளும்:</u>

1. கடந்த சில வருடங்களாக நமது அங்கத்துவ எண்ணிக்கையில் பெரிதாக எந்த மாற்றமும் இல்லை. ஏன் அதிகமான பெண்களை நமது ஐக்கியத்துக்குள் சேர்க்க முடியவில்லை. நமது பெண்களின் தாலந்துகளை தெரிந்து அவைகளை ஆண்டவருக்காக உபயோக்கிறோமா? தற்போதுள்ள நம் இளம் வாலிப பெண்களை பயிற்றுவித்து தெய்வ பக்தியுள்ள வருங்கால சந்ததியாக வளர்க்கிறோமா?
2. ஆண்டவருக்காக பெரிய காரியங்களை செய்ய நமக்கு வாஞ்சையிருந்தாலும், நமது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பல கஷ்டங்கள் உள்ளன. மாகாணரீதியில் “தலைமைத்துவ பயிற்சிகள்” தேவை, முக்கியமாக இளம் தலைமுறையினருக்கு.
3. தற்போதுள்ள நமது திட்டங்களும் நிகழ்ச்சிகளும் நமது பெண்களுக்கு பிரயோஜனமாக இருக்கிறதா? நமது சபையிலுள்ள மூத்த, இளம் தாய்மார்கள், கைம்பெண்ககள், கல்வித் தகுதி இல்லாதோர் போன்ற எல்லா தரப்பட்ட பெண்களின் சமூக,ஆவிக்குரிய தேவைகள நம் திட்டங்கள் சந்திக்கிறதா?
4. பெண்களாகிய நாம், நமது குழந்தைகள், ஆண்கள் மற்றும் வாலிபர்களை கர்த்தருக்குள்ளாக வழிநடத்த என்ன செய்கிறோம்?
5. நாம் ஒவ்வொரு சபைகளும் நம்முடைய மற்ற சபைகளோடு தொடர்புடைய சபைகளாய் இருக்கிறோம். எனவே, நாம் நமது தொடர்பில் இருக்கும் நமது சபைகளுக்கு என்ன மாதிரியான உதவிகளை செய்கிறோம். நாம் ஒரு சிறந்த வழிகாட்டிகளாக இருக்க முயற்சிக்கலாம்.
6. நாம் ஒரு சமூகமாக வெளியிலிருக்கும் சமூதாயத்திற்கு உதவிகள் செய்யலாம் எ.டு. நேபாள பள்ளி பிள்ளைகளுக்கான நிகழ்வுகள், நம் அக்கம்பக்கத்திலிருக்கும் பள்ளிகள்,மற்றும், நம்மை சுற்றியிருக்கும் சமூதாயத்துக்கு உதவலாம்.

பெண்கள் மத்தியில் நான் மிகவும் பார்த்து வியந்து மகிழ்ந்த காரியம், நம் பெண்களுடைய உறுதியான ஜெபஊழியம்.அதற்காக நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். தங்களுடைய சபைகளுக்காகவும், போதகர்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் மணிக்கணக்கில் முழங்காலில் நின்று ஜெபிக்கிற பெண்கள் நம் மத்தியில் உண்டு. உண்மையாகவே, நீங்கள் ஆண்டவர் மேல் வைத்திருக்கும் அன்புக்கும், ஊழியத்தின் மேலிருக்கும் வாஞ்சைக்கும் நான் உங்களை வாழ்த்துகிறேன்.

நெகேமியா 8:10 “..............கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பதே உங்களுடைய பெலன்”. இந்த வசனம் தான் என் ஊழியத்தில் என்னை உற்சாகப்படுத்துகிற வார்த்தையாக இருக்கிறது. என்னுடைய சுய பெலத்தினால் இந்த ஊழியத்தை செய்தால் அது எனக்கு பாரமாக இருக்கும். ஆனால் நான் கர்த்தரையே சார்ந்திருப்பதால் இது எனக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறது. நம்முடைய மகிழ்ச்சி, ஜெயம் எல்லாமே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே.

முடிவாக, எனக்கு இந்த ஊழியத்தை செய்ய பெலன் கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். எனக்கு ஒத்துழைப்பு கொடுக்கிற த.வ.மா தலைவர் மறைதிரு டேனிஸ் ராஜ் அவர்களுக்கும்,எனது செயற்குழுவினருக்கும் ,எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனது ஊழியத்தில் எனக்கு மிகவும் உறுதுணையாகவும்,உதவியாகவும் இருக்கும் எனது அன்பு கணவர் திரு.ஜெயபால் ஜோசப் அவர்களுக்கும், எனது ஸ்தல சபை சுபாங் ஜெயா மெதடிஸ்ட் பெண்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எல்லா புகழும், துதியும் கனமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவருக்கே.

அவரது பணியில்,
திருமதி.கனி ஜெயபால்,
தலைவி, த.வ.மா.மெ.பெண்கள்